# தணிந்த தீ

அடுத்தடுத்து அலைகளாக வந்தன கடிதங்கள். சூலிமகளின் அழைப்பிற்கு விரையும் ஆவல் எனக்கு மட்டும் இல்லையா? மறுதோன்றி இலைகளை அரைத்து என் கைகள் திட்டுத்திடராகச் சிவந்தாலும், அந்த விழுதைப் புதல்வியின் கை விரல்களில் இலட்சணமாக இட்டு மகிழும் அன்னை நான், போகத்தான் போகிறேன். சற்று மெள்ளப் போவோமே என்று எண்ணம். ஆனால் மோத வந்து விழுந்த அழைப்புகள் என் காலடி மணலைப் பறித்தன. இடம்விட்டு நகர்ந்தேன்.

மாதம் ஆறு ஆகியிருந்தது லக்ஷ்மிக்கு. ஆனால் அவளைப் பார்த்தால் வயிறு மட்டும்தான் தெரிந்தது. மூன்று குழந்தைகளைக் கட்டிக்காக்கும் பொறுப்பு. நாலு வேலைக்காரரைக் கண்காணிக்க வேண்டும். இந்தச் சுமை தாங்காமல்தானோ என்னமோ அரையுடம்பு ஆகிவிட்டாள். கடிதந்தோறும் தன் குடித்தனப்பாங்கு முழங்குகிறவளை என்னவென்று கேட்பேன்? ஒவ்வொரு அம்சமும் திருத்தமாகயிருக்கப் பாடுபடும் முயற்சியில்தான் அவள் அயர்ச்சி கொண்டுவிட்டாள்!

நான் வந்துவிட்டேனே; ஓய்வும் உதவியும் எத்தனை கொடுக்க முடியுமோ கொடுத்துக் கவனித்தேன். லக்ஷ்மியே அதை உணர்ந்தாள். "நான் அழைத்ததும் நீ வந்திருக்க வேண்டும் அம்மா!" என்றாள்.

அவள் கேள்வியாகக் கேளாததினால் நானும் விடை கூறவில்லை. என் தாமதம் எதனால் என்பதை, கடிதத்திலே நாசூக்காகச் சொல்லித்தானேயிருந்தேன்! முதுமையில் புருஷன் - மனைவி, சாத்தியப்பட்டவரை ஒரே இடத்திலிருப்பது நல்லது. யாருக்கு எந்த சமயத்தில் என்னாகுமோ? அவருக்கு, வேலையிலிருந்து விலகிவிட்ட பின்னரும் ஓய்ந்திருக்க மனமில்லை. இப்போதும் சில பொறுப்புகளை மேற்கொண்டுவிட்டார். அரைகுறைச் காரியம் கிடையாது; செய்யமாட்டார். அவருடைய அலுவல் முடிந்து புறப்படலாமென்று காத்திருந்தேன். பயனில்லை. அலை ஓயுமா?

இப்போது மீண்டும் வாய் திறந்து - சொல்ல எனக்குக் கூச்சம். பத்து மாதம் சுமந்து பெற்ற மகளாயினும் சொல்ல முடியவில்லை.

** ** **

ஒன்பது மாதம் கர்ப்பவாசம் செய்துவிட்டுப் பிறக்க வேண்டிய மகவு, ஒரு மாதம் முன்னதாகப் பிறந்துவிட்டது லக்ஷ்மிக்கு. நாம் பேச்சுக்குப் பத்து மாதம் என்பதற்கு ஏச்சுப் போலாயிற்று!

லக்ஷ்மி பெற்றுப் பிழைத்தாள். குழந்தை போய்விட்டது.

என்னவெல்லாமோ எண்ணிவிட்டேன். நான் விரைந்து வராததினால் அவளுடைய உடம்பு கெட்டு, அந்த உடலில் உருவான சிசு பயனற்றுப் போனதோ? முதல் மூன்று மகப்பேறுகளுக்கும் என்னிடம் வந்து நேருங்கூருமாயிந்தாளே; இந்தத் தடவையும் அவளை அங்கேயே அழைத்துக்கொண்டிருந்தால்! 'நீ வா' என்று என்னை அழைத்தவளை, 'நீயே வந்துவிடு' என்று நான் வற்புறுத்தாதது பிசகோ?

தோன்றியதைச் சொல்லித் தீர்த்தேன். லக்ஷ்மி, இமையோரம் துளும்பிய கண்ணீரைச் சுண்டி அடக்கிவிட்டாள். கண்ணிலிட்ட மை கரையாமல். அவள் காட்டிய துளிக்கண்ணீர், மை மறந்து போன என் கண்களில் கறைபோட்டது.

உறங்கொண்டு உடம்பு தேறுகிறவரை துணையாக வேண்டும் நான். குழந்தை தக்கியிருந்தால், அந்தப் புத்துயிரினால் சீக்கிரம் தென்பூறும். இப்போது? பசையற்ற எண்ணெயும், வாசமில்லாப் பொடியும், பசுமை வற்றிய மஞ்சளும் ஒட்டாமல் பூசி முறை குளிக்கும் பிள்ளைத்தாச்சி, லக்ஷ்மி. ஈரக்குழலைத் துவட்டி அதற்கு தசாங்க தூபம் போடும்போது, அவளுடைய மற்ற குழந்தைகள், "அம்மாவுக்கு இதென்ன உபசாரம்?" என்று பார்க்கின்றன. 'அவமானம்' என்று கருதுகிறாள் லக்ஷ்மி. அவளுடைய பச்சையுடம்புக்கு எங்கே சாட்சி?

எனக்குக்கூட, மாப்பிள்ளையின் விருந்தாளியாக வீணேயிருப்பதுபோல் வேதனை. வேதனை குறையும் வழி பிறந்தது. வரச்சொல்லிவிட்டார் அவர். சிருங்கேரியில் பிரும்மாண்டமான ஹோமம் நடக்கப் போகிறது. பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகர பாரதியாரின் ஷஷ்டியப்த பூர்த்தியையொட்டி நடக்கும் பெருவிழா. ஆஸ்திக அன்பர்கள் விரும்பி நடத்துகிறார்கள். ஆம்; லோக க்ஷேமத்திற்காக நடத்த வேண்டும் என்றுதான் அன்பர் கூட்டம் பெரியவரை அணுகி, வேண்டி, அவரை இணங்கச் செய்துவிட்டது. அனுமதியும் கிடைத்துவிட்டது.

புறப்பட்டேன் லக்ஷ்மியுடன், பள்ளிக்கூடம் போகிற பெரிய பிள்ளையையும் கணவரையும் விட்டுவிட்டுக் கிளம்பும் போது லக்ஷ்மி பன்னிப் பன்னிக் குறிப்புகள் கொடுத்தாள். வேலைக்காரருக்குப் பணித்துப் பொறுப்புச் சொன்னாள். நண்பர்களிடம் எதற்கெல்லாமோ திட்டவட்டமான யோசனைகளைக் கொடுத்து வந்தாள். அப்படியும் தணியாத கவலையோடு புறப்பட்டாள்: பார்த்தேன். "அதோ பார் உன் பூஜை பீடம். அதிலே நீ ஏற்றி வைத்திருக்கும் தீபஜ்ஜோதியிடம் உன் பாரத்தை இறக்கிவிட்டுவா!" என்று கூறிக் கிளப்பினேன். தினந்தோறும் அவள் வணங்கும் சுடர் மங்கை காப்பாள். திரியின் பொறி அணைந்தாலும் விளக்கு விளக்குத்தான். சுடருக்கு அது எப்போதும் இருப்பிடம்.

** ** **

ஊர் மீண்ட மறுவாரம் சிருங்கேரிக்குப் பயணம். அவர் (லக்ஷ்மியின் அப்பா) செய்திருந்த ஏற்பாடு வெகு அழகு.

இரண்டு நாள் மோட்டார் சவாரி. இடையிடையே சில இடங்களில் தங்கிப் போனோம். ஒவ்வொரு இடத்திலும் புதுக்குழு ஒன்று வந்து கலந்தது. இவர் கற்றறிந்தவர் என்னும் மதிப்பு வைத்திருக்கும் நண்பர்கள்தாம். வழிநெடுக வேதாந்த பரமான பேச்சும் விளக்கமுமாக இவரும் தமது உயரிய ஸ்தானம் பயனுறச் செய்தார். 'ஆஹாஹா, ஓஹோ!" என்று பிரமித்துக் களித்தார்கள் அவர்கள். எங்கள் கோஷ்டியில் சேர்ந்திருந்த பெண்களும் என்னைப்போலத்தான். புருஷர் கும்பலில் இழுத்துப் போர்த்திய தலைப்புடன் ஒதுங்கி உட்கார்ந்திருந்தோம். லக்ஷ்மி புருஷர்களுடன் பேசிப் பழகக் கூச்சப்படமாட்டாளே; அவள் கூட இடத்துக்கேற்றபடி இருந்துவிட்டாள். மோட்டாருக்குள் முழங்கிய சொற்பொழிவை நாங்கள்தாம் அடக்கமாகக் கவனித்து இன்னும் நன்றாக அனுபவித்தோம்!

பல வாய்க்கால்களாக ஓடி ஒன்றாகிப் பாயும் ஆறு போன்று நாங்கள் பல இடங்களிலிருந்து கிளம்பி வந்து ஒரே கோஷ்டியானோம். துங்கை நதிக்கரையில் வீற்றிருக்கும் சாரதா தேவியின் இருப்பிடம் நோக்கி எங்கள் கருத்து நீண்டது.

பங்களூரில் ஒரு நண்பர் ஒரு இடம் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார். அங்கிருந்து மறுநாள் அதிகாலை புறப்பட்டால் சிருங்கேரியைச் சேர நேரம் பொருத்தம். அதனால், பயணத்தின் இரண்டாம் இரவு அவ்விடம் வந்து சேர்ந்தோம். மளமளவென்று பஸ்ஸிலிருந்து இறங்கினோம். தொல்லை கொடுக்க வரவில்லை, தங்கிப் படுக்க வந்தோம் என்ற நம்பிக்கை. பெரிய வீடு அது. அதன் யஜமானர் மலர்ச்சியுடன் வரவேற்றார். எங்களை வரவேற்ற பெண்ணும் இன்முகம் காட்டினாள். பிறகு பரபரப்புடன் உள்ளே போய்விட்டாள். நாங்கள் கை, கால் அலம்ப பின்கட்டுக்குச் சென்றோம். அங்கே கண்டகாட்சி! மூன்று மண்ணடுப்புகளிலே ஜ்வாலை - ஓமகுண்டம் போல. ஒரு அடுப்பின்மேல் அண்டா, மற்றொன்றில் தவலை, இன்னொன்றில் வாணலி, அந்தப் பெண், பாத்திரமும் தானுமாக அங்கே வளைய வந்தாள்.

"சமையலாம்மா?" என்று கேட்டேன். எங்களுக்காகயிருக்கும் என்ற எண்ணமே இல்லை.

"ஆமாம் மாமி" என்றாள்.

"ஏன் இத்தனை நாழி? தினமும் இப்படித்தானா?"

என் கேள்வியை அந்தப் பெண் ஒரு புன்னகையோடு ஏற்றுக்கொண்டு, "ஆகாரம் பண்ண வேண்டாமா நீங்கள்!" என்று அமைதியாக வினவினாள்.

"என்ன, எங்களுக்காகவா? எட்டு மணிக்குப் பழம், பால் சாப்பிட்டாச்சு; வேண்டாமம்மா" என்று நாங்கள் இரண்டு மூன்று பேர் சொன்னோம்.

"அதனால் என்ன? ஒரு குழம்பு, கறி, ரசம், வேறொன்றும் செய்யவில்லை!" என்பது அவள் பதில்.

"அண்டா எதற்கு? சாதம் வடிக்கத்தானே! வேண்டாமம்மா, நிறுத்திவிடு" என்றோம்.

"நன்னாயிருக்கு மாமி! எத்தனை நாழி சாதமாக!"

"நாங்கள்ளாம் வயசானவர்கள். எத்தனை தடவை சாப்பிட முடியும், அதுவும் அர்த்த ராத்திரியில்? உடம்புக்கு ஒத்துக்காது. வீணாய் சிரமப்படாதே."

"பெரியவர்கள் வந்திருக்கிறீர்கள். ஒருவாய் அன்னம் போடாமலிருக்க எனக்குச் சம்மதப்படுமா? பதினோரு மணிக்குள் முடிந்துவிடும்."

முப்பது பேருக்கு சமைக்க வேண்டும். அவளோ முப்பது பேர் உதவியுடன் சமைப்பவள்போலப் பேசினாள். தன்னுடைய முப்பது வயதைத்தான் வைத்திருந்தாள் துணை.

"நாங்கள் வருகிறது தெரியுமாம்மா?" என்று நான் கேட்டேன்.

அதற்கு லக்ஷ்மி, "என்ன கேள்வி அம்மா? இங்கே வருகிறதைப் பற்றி நமக்கே எப்போ தெரிந்தது?" என்று கேட்டுவிட்டு, உடனே, "தந்தியாவது, டெலிபோனாவது கொடுத்திருப்பாரோ தங்களூர்க்காரர்!" என்று யோசித்தாள். எங்கள் பேச்சுக்கு செவி கொடுத்தவாறு காரியம் பண்ணிக்கொண்டிருந்த அந்தப் பெண்மணி, "சிருங்கேரியில் பெரிய ஹோமம். அதற்கு இந்த வழியாக யாராவது வந்துபோனால் இப்படி ஒரு கைங்கரியம் நான் செய்யக்கூடாதா?" என்று எம்மை விளித்தாள்!

"நீ போகப் போகிறதில்லையாம்மா?" என்று கேட்டதும், முறுவலித்து, "சௌகரியப்படாது போலிருக்கு," என்று பதிலளித்தாள், அந்த அன்னபூரணி.

"சமையல் நடக்கிறதப்பா நமக்கு" என்று லக்ஷ்மி ஓடிப்போய் தெரிவிக்கவே, அவர் வந்து பார்த்து, "அடாடா" என்று வருத்தப்பட்டுவிட்டுப் போனார்.

"நாமும் ஆளுக்கொரு காரியம் செய்தால் ஆச்சு" என்று கிளம்பினோம்.

"வற்றக்குழம்பு போதாதோடியம்மா? சுமை பருப்பைப்போட்டு சாம்பாருக்கு வறுத்து வைத்திருக்கிறாயே!" என்று ஒரு அம்மாள் அங்கலாய்த்ததும், "சாம்பாருக்கு அரைக்க வேண்டுமே!" என்று லக்ஷ்மி ஓடினாள். தேங்காயை உடைக்க வந்த எங்கள் உபசாரி, விருந்தாளிகளிடம் வேலை ஏற்கும் கூச்சமுடன் தேங்காய் முடிகளைப் புடவைத் தலைப்பில் மறைத்து எடுத்துப் போனாள். துருவவும் ஆரம்பித்துவிட்டாள், லக்ஷ்மிக்குக்

கொட மறுத்து. லக்ஷ்மி கல்லுரலைக் கண்டு அங்கே இடம் பிடித்துக்கொண்டாள்.

"கறி பண்ணாதே. அப்பளம் கொண்டு வந்திருக்கிறேன், வாட்டிவிடலாம். எங்கே, குமுட்டி கொடு," என்று நான் போனேன். அந்தப் பெண் வாணலியில் அரைப்படி எண்ணெய் ஊற்றி அடுப்பில் ஏற்றிவிட்டாள், அப்பளம் பொறிக்க! அடுப்பை நெருங்கிப் பார்த்தால், பருப்புத் தவலைக்குமேல் அருக்கஞ்சட்டியாக வெற்று வெந்நீர் அல்ல! உருளை கிழங்கை வேகப் போட்டிருந்தாள்!

முதலில் புருஷர் பந்தி, பிறகு பெண்கள், சமைத்தவள் சாப்பிடவில்லை அவளும் கணவரும் குழந்தைகளும் வருவதற்கு அரை மணி முன் தான் சாப்பிட்டார்களாம். ஒன்றரை நாளாக இலைபோட்டுச் சாப்பிடாத நாங்கள், இப்போது ரசமுடன் சாப்பிட்டோம். அந்தப் பெண்ணின் அன்பும் பண்பும், மணங்கமழ்ந்த அமுதல்லவா?

கங்குலில் துயில் விழித்துப் பல் துலக்க வந்தேன். வந்தவள் பிரமித்துப் போனேன். ஒரு அடுப்பில் காப்பி; மற்றொன்றில் உப்புமா! அடுக்களையில் அவள்!

கொஞ்ச காலமாக நான் போலிப் பல்வரிசை அமைத்துக்கொண்டிருந்ததால், அவற்றை யாரும் பாராதவாறு சுத்தம் செய்து மாட்டிக்கொள்ள நல்ல இருட்டிலேயே எழுந்துவிடுகிறேன்; என்னையும் முந்திக்கொண்டு விழித்து வேலை செய்து கொண்டிருந்தாள் அவள்! இந்த மட்டும் ராத்திரி எங்களைக் கண்டதும் தோசைக்கு ஊறப்போட்டு விடியவிடிய உட்கார்ந்து அரைக்காமலிருந்தாளே!

பலபலவென்று பொழுது புலர்ந்தது. புருஷர்களின் காலை சந்தி ஜபம் ஆயிற்று. சிற்றுண்டி முடித்துக்கொண்டு புறப்பட்டோம். என்னைப் போலவே மற்றவர்களும் ஏறக்குறைய ஒரேவிதமான வாழ்த்துக்களை உள்ளமாறத்தான் அடக்கி அளித்திருக்கவேண்டும். இதுதான் ஆரம்பம்; ஆரம்பமே அற்புதம். எல்லையிலேயே இத்தகைய காணாத காட்சியெனில், உள்ளே நாங்கள் கண்ட கோலாஹலம், ஆஸ்தீக உள்ளங்கள்கூட கனவிலும் நினைத்திராத மாட்சி. ஸஹஸ்ர சண்டிஹோமம், ருத்திர ஹோமம் - இரண்டும் விழாக்கள்.

ஸஹஸ்ர சண்டி ஹோமத்திற்கு அக்னி குண்டங்கள் பத்து. ஒரு குண்டத்தைச் சுற்றி ஹோமப் பிராமணர் முப்பத்தி ரெண்டு பேர்; ஆக முன்னூற்றிருபது பேர். அவர்கள் மஞ்சள் வேஷ்டியுடுத்தி வேள்வித் தீயை வளர்த்து வேதங்களும் மந்திரங்களும் ஓதினார்கள். பெரிய பெரிய காஷ்டங்களை அக்னியில் இட்டார்கள். நெய் வார்த்தார்கள். பக்தர்கள் கொண்டு வந்து கொடுத்த பொருள்களையும் ஆஹுதி செய்து மந்திரஞ் சொன்னார்கள். உயர்ந்த சரிகைப் பட்டுப் புடவைகளைக் கூட சில

கொணர்ந்தனர்; புத்தம் புதியன, அவற்றையும் அந்தணர் அக்னிக்கு அர்ப்பணமாக்கினர்.

ஏகாதசருத்திரர் என்று சொல்லுவார்களே - அதனால்தான் போலிருக்கிறது, ருத்திர ஹோமத்திற்குப் பதினோரு குண்டங்கள். லட்சோப லட்சம் ஜனங்கள் திரள் திரளாக; விருந்தாளி ஜனங்களுக்கு வேண்டிய வசதிகளை ஊர் மக்கள் கவனித்தனர். தட்டுத் தட்டாக பட்சணங்கள் வழங்கும் அன்பர்கள். சீப்பு குங்குமம், வெற்றிலைப்பாக்கு கொடுக்கும் சுமங்கலிகள். நீர் மோர், பானகம் விநியோகம் செய்யும் உபகாரிகள். அனைவர் கருத்திலும், புனிதச் செயல்களின் பெருமை உணரும் பொலிவு. பார்க்கத் தெவிட்டாத இன்பம். கண்கொள்ளாத அழகு. காணக்கிடைக்காத பேறு.

மனது குளிர்ந்தது. கண்கள் நிறைந்தன. வேள்வித் தீ தணிந்தாலும், ஆர்வக் கனல் அணியவில்லை. ஊரை நோக்கித் திரும்பினோம். மைசூர் வழிவந்து சாமுண்டேஸ்வரியைத் தரிசித்து, பின்னர் கோஷ்டி கலைந்தோம். அவரவர் ஊரை நாடி ரெயில் பயணம் இப்பொழுது.

** ** **

இருப்பிடம் வந்து சேர்ந்ததும் விபூதி, குங்குமப் பிரசாதம் வழங்கினோம். விவரம் கேட்டவர்களின் ஆவலையும் மிஞ்சின ஆர்வமுடன் சொன்னோம்.

ஓரிரண்டு சமயங்களில் நான் ஹோமங்களின் விவரம் மட்டும் கூறினேன். அருகிலிருந்த லக்ஷ்மி, 'அந்த மாமியைப் பற்றிச் சொல், முக்கியமாய்!' என்றாள். நானும் உடனே அந்த விஷயம் கூறிவிட்டுப் பிறகு ஒரு முட்டுப்போட்டேன். "அந்தப் பெண்ணுக்கு அப்படியே பழக்கமிருந்திருக்கும். ஏனென்றால் வீட்டில் தயாராய் மூன்று மண்ணடுப்புகள்; தகுந்த பாத்திரம் பண்டம். கொட்டிலிலே நான்கைந்து பசுமாடுகள். காலம்பற காப்பிக்குப் பால் கறந்து வந்தது," என்றேன்.

சுட்டு விழி காட்டினாள் லக்ஷ்மி. "ஏம்மா, வழக்கம் இருந்தால் மட்டும்? அலுக்காமல் சலிக்காமல் உத்வேகத்தோடு செய்ய எத்தனை திராணி வேணும்? அதுவும் . . ."

பரபரப்புடன் குறுக்கிட்டேன். "ஆமாம் ஆமாம். இல்லை என்கிறேனா? ரொம்ப ஆச்சரியப்பட்டேன், நானே. இத்தனைக்கும் அந்த நாளில், ஒண்டியாய் ஐம்பது பேருக்கு விருந்து சமைத்திருக்கிறேன். அப்படியும் அதிசயப்பட்டேன்," என்று ஒப்புக்கொண்டேன்.

மற்றொரு சமயம் லக்ஷ்மி, "என்னம்மா நீ! அந்த மாமியை மறந்தாச்சு!" என்று குறை கூறினாள்.

"இல்லை; ஹோமத்தைப் பற்றி கேட்டவர்களுக்கு அதையே முக்கியமாகச் சொல்கிறேன், " என்றேன்.

நாங்கள் ஒரு புனிதமான வைபவம் காணப் போய்க்கொண்டிருந்ததனால்தான் எங்களுக்கு மதிப்பு அளித்து அந்தப் பெண்மணியும் பெருமைக்குள்ளானாள் என்பதையும் ஓரிரு தடவை குறிப்பிட்டுப் பேசினேன்.

என்னைச் சூழ்ந்திருந்தவர்கள் லக்ஷ்மிக்குப் பழக்கப்படாதவர்கள். அதனால் அவள் பேசப் புகவில்லை. முதன் முதலில் கணவன் வீடு சென்றபோது, பிறந்தகம் அவள் விளையாடி வளர்ந்த ஊரிலிருந்தது. இது அவளுக்குப் புது இடம்.

இடம் புதிது, ஊரார் அன்னியர் என்பதனால் லக்ஷ்மிக்கு இங்கே இருப்புக் கொள்ளவில்லையா? ஹும், தன் வீடு ஒன்று ஏற்பட்ட பின்னர், பிறந்தகம்கூட வேற்றிடம்; ஒட்டாது. லக்ஷ்மி ஊருக்குப் போய்விட்டாள். மோருக்குள்ளே மிதக்கும் வெண்ணெய் உருண்டைபோல எத்தனை நாள் இருப்பாள்?

** ** **

வடநாட்டு வாழ்க்கையில் லக்ஷ்மி, வீட்டிலும் காரியக் கப்பல்; வெளியிலும் காரியதரிசி. உண்டி விருந்துகள் செய்வதிலாகட்டும், கலை விருந்துகள் நடத்துவதிலாகட்டும், அவள் காரியவாதி. எனினும் பயபக்திகளையும் அறிவாள்; உணர்ந்தவள். லட்சக்கணக்கானவர் கண்டுகளித்த ஹோம விழாவிற்கு லக்ஷ்மியும் அஞ்சலி செய்தாள்; சொன்னாள். ஆனால் அந்தச் சடங்குகளையும் ஒதுக்கிவிட்டு, தன் நினைவிலே ஒரு பெரும் பகுதியை அந்த உபசாரி மங்கை நல்லாளுக்கு ஈந்தாள் லக்ஷ்மி.

போய்ச் சேர்ந்ததும் லக்ஷ்மி கடிதம் போட்டாள். அதில் இதைச் சொன்னாள்: “ஹோம விழா, நூற்றுக் கணக்கான நண்பர் முனைந்து கூடி நடத்தினர். ஒரு சாதாரணக் குடித்தனப் பெண் நம் அனைவர் முன் ஒரு அசாதாரணப் பிறவியாத் தோன்றி விந்தைப்பட வைத்தாளே!" என்று எழுதினாள்.

கடிதத்தின் உருக்கம் இத்துடன் நின்றிருந்தால் என்ன நினைத்திருப்பேன்?

ஒருநாள் சமுத்திர ராஜன், தன்னை நோக்கி ஓடிவரும் ஆறுகளைப் பார்த்து விளித்தான். "பெரிய மரங்களைப் புரட்டிக்கொண்டு வருகிறீர்களே! ஏன் நாணற்புல் அதிகம் கொணருவதில்லை?" என்று கேட்டான். கிடைத்த மறுமொழி இது; "வீறாப்புடன் நிமிர்ந்து வழி மறிக்கும் மரங்களைப் பெயர்க்க முடிகிறது. ஆனால், வளைந்து தலைவணங்கி வழி கடந்த பின் நிமிர்ந்து கொள்ளும் நாணலைப் பெயர்ப்பது எளிதாக இல்லை!" - அடக்கத்தின் சக்தியைச் சொல்லும் அருமையான கதை; அழகான மேற்கோள்.

லக்ஷ்மி கர்வியல்லள். ஆனால், அவள் இப்பொழுது பெற்றது அடக்கம்தான். அவளுடைய உருக்கமே சொல்கிறது! பெற்று வெற்றாக நின்றிருந்தவளான நான், அந்த மாமியைக் கண்டதுமே கூசினேன். பிறகு கூச்சமொழிந்தேன். ஆம்! மனத்தின்மையினாலே உடல் வன்மை கொண்டவளை என்னுடைய வாடை என்ன செய்துவிடும்? பொறாமைப்படக் கூட நான் அணுக முடியாதே! “அத்தகைய நிலையிலன்றோ இருந்தாள் அந்தப் பெண்மணி?" என்று கேட்கிறாள் லக்ஷ்மி.

"எட்டாம் மாதத்திலே அசுபப் பிரசவமாகி குழந்தை போனதற்குக் காரணம் - கருத்தரித்தது முதற்கொண்டு எனக்கிருந்த மனச்சுமைதான். பிறந்தகம் போய்ச் சீராடாமல் இங்கேயே பொறுப்புகளுக்குகிடையில் சுமக்கிறோம் என்ற தன் நினைவுதான். உடலை மறந்து உள்ளப் பொலிவுடன் நம்மை உபசரித்த அந்தப் பூர்ண கர்ப்பிணியின் திருவயிற்றில், சிருங்கேரி நிவாஸினி ஸ்ரீ சாரதாம்பாள் பிறக்கத்தகும்," என்று முடித்திருந்தாள் லக்ஷ்மி.

உடலுக்குள்ள முழுப் பெருமையோடு விளங்கின நிலையில் லக்ஷ்மி தன்நிலையைப் பற்றி பிரமாதமாக நினைத்திருந்தால், அது குற்றம் ஆகாது. ஆனால், அதே பெருநிலையிலிருந்த இன்னொரு பெண்மணி, தன் மெய்மறந்து செயலாற்றிவிட்டதைக் கண்டுவிட்டாள். அந்தப் கொற்றங் கண்டதும், லக்ஷ்மி, தன்னுடையது 'குற்றம்' என்று உருகினாள். அந்தப் பெண்ணின் சக்திக்கனல் லக்ஷ்மியை நன்றாக உருக்கி விட்டது.

குழந்தை சிறுமைப்படுகிறாளே என்று நான் அஞ்ஞானப்படலாமா? இருந்த அஞ்ஞானமும் விலகிவிட்டது! சிருங்கேரிப் பயணம் பற்றி கேட்டவர்களுக்கு நான் ஹோமங்களைப் பற்றிச் சொன்னால் போதுமென நினைத்த காரணம், என்ன? எந்த சந்தர்ப்பத்திலாவது எவரேனும் லக்ஷ்மியின் மனம் நோகச் சொல்லிவிடக்கூடுமோ என்ற பயம். சூல் பாழானவளும், சூல் கொண்டவளும் சந்திக்கக்கூடாது என்பது ஒரு பழைய காலத்துக் கட்டளை. அதனால்தான், லக்ஷ்மியுடன் போன இடத்தில் ஒரு நிறைசூலியிருந்தாள் என்பதைக் குறிப்பிட்டுப் பேச விரும்பவில்லை நான்.

லக்ஷ்மிக்கு சாஸ்திரம் தெரிந்திருக்கிறது! இப்பொழுது தெரிந்தது எனக்கு. அப்படி யாராவது தப்பித் தவறி சொல்லியிருந்தாலும் லக்ஷ்மி வருந்தியிருக்கமாட்டாள். அப்படி மதிப்பு வழங்கி, தலை வணங்கி அந்தப் பெண்மணியிடம் பணிந்து போயிருக்கிறாள்.

பாலுக்குப் பிறையூற்றித் தயிராக்கி, அதைச் சிலுப்பி வெண்ணெய் எடுத்த - பெற்று வளர்த்த மகளை அறிந்த - அன்னை நான். எனக்குத் தெரியாதா லக்ஷ்மியின் இயல்பு? அவள் தன்னிடமுள்ள சிறப்பியல்புகளை எளிதில் மறந்து போகமாட்டாள். தாழ்வு மனப்பான்மை கொள்ளமாட்டாள்.

அப்படிப்பட்டவள் அந்தப் பெண்ணிடம் தாழ்ந்தாள் என்றால், அது யாத்திராமார்க்கத்தில் கிடைத்த பலன் தவிர வேறு எதாயிருக்க இயலும்?

ஹோமாக்னியை விடப் பன்மடங்கு தணிவாக எரிந்த அடுப்புத் தீ உயர்ந்தது என்று லக்ஷ்மி கருதுகிறாள். நெய்யோடு பல பொருள்களை விழுங்கின ஓமத் தீயைக் காட்டிலும், நெய்யுடன் பண்டங்களைப் பக்குவமாக்கி வழங்கும் அடுப்புத் தீ சிறந்தது என நினைக்கிறாள். இதிலேயே தெரிகிறது ஓமக்கொழுந்தின் அடக்கம். மறைமுகமாய் பணி புரிந்த சக்தி.

**　　**　　**

ஊருக்குப்போன லக்ஷ்மி அங்கே நறுநெய்யாக மணங்கமழ்ந்தாள். முகர்ந்தேன், தொலைவிலிருந்துகொண்டே அதன் பயன் கண்டேன்.

என் அழைப்புக்கு ஓடி வரவில்லை லக்ஷ்மி. வீடு வாசலை விட்டுவிட்டு என்னருகு வந்திருக்க அவளால் முடியவில்லை. இவையெல்லாம் ஒரு மகளின் சக்திக்கு அப்பாற்பட்ட கடமைகள்தாம்!

அவளைச் சொல்லி என்ன பயன்? எனக்குமட்டும் என்ன தெரிந்துவிட்டது? தெரிந்துகொண்டதும் நான் எங்கே நிலைத்திருக்கிறது? தறுநெய்யில் வெண்ணெய் போன சுவடு தெரியவில்லையே என்று குறை கூறுகிறேனே! நோய்ப்பட்டிருக்கிறேன். லக்ஷ்மி வரவில்லை என்பதனால் அவளுடைய அத்தனை பேச்சும், எழுத்தும், திறமையும் சமர்த்தும் எனக்கு என்னத்தைச் சாதித்துவிட்டனவென்று நினைக்கிறேன். தப்புத்தானே! இப்பொழுது மற்றொரு புனிதமான யாத்திரைதான் போகப்போகிறேன். என் பெண் உடன்வருவதை விரும்பப் போகிறதில்லை அவள் எதற்கு அண்மையில்தான் வர வேண்டும்? சுகமாக அங்கேயே தங்கட்டும்.

**********

(சுதேசமித்திரன், அக்டோபர் 9. 1955)